# H U G O   B O S S

## ஹ்யூகோபாஸ்சப்ளையர்நடத்தைவிதி/ஹ்யூகோபாஸ்சமூகதரநிலைகள்

**முன்னுரை**

ஹ்யூகோ பாஸ் விநியோகிப்பாளர்கள் நன்னடத்தை நெறியானது வணிக நெறிமுறைகள், தொழிலாளர் மனித உரிமைகள், சமூக தரநிலைகள் மற்றும் பொதுவான சுற்றுச்சூழல் தரங்கள் தொடர்பான நிர்ணயங்களை வெளிப்படுத்துகிறது.

இதன் அடிப்படை தேவைகள் ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா) மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம், வணிக மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா வழிகாட்டுதல் கோட்பாடுகள், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ) முக்கிய மாநாடுகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மேம்பாட்டு அமைப்பின் வழிகாட்டுதல் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளன.

மேலும், காலநிலை மாற்றத்திற்கான ஐ.நா. கட்டமைப்பு மாநாட்டின் (யு.என்.எஃப்.சி.சி) கீழ் காலநிலை நடவடிக்கைக்கான வடிவமைப்பு தொழில் சாசனத்தின் கொள்கைகளாக கருதப்படுகிறது. ஹ்யூகோ பாஸ் மற்றும் அனைத்து விநியோகிப்பாளரின் ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளாக நன்னடத்தை நெறி கருதப்பட வேண்டும். விநியோகிப்பாளர்கள் தங்கள் பணியாளர்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து சரியான முறையில் ஹ்யூகோ பாஸ் வகுத்த தேவைகள் மற்றும் அந்தந்த பொருந்தக்கூடிய தேசிய சட்டங்கள் குறித்து தெரிவிக்க கடமைப்பட்டுள்ளனர்.

ஹ்யூகோ பாஸ் விநியோகிப்பாளர் நன்னடத்தை நெறியானது உடன்பாட்டு நிர்ணயங்களின் அடிப்படையை உருவாக்குகிறது. அவை ஹ்யூகோ பாஸ் விநியோகிப்பாளர்களால் கவனிக்கப்பட வேண்டும். ஹ்யூகோ பாஸ் வகுத்த சட்ட நிலைமை கொள்முதல் நாடுகளில் பார்வையில் இருந்து ஈடுசெய்ய வேண்டும்.

ஒரு நாட்டில் சட்டரீதியான விதிகள் ஹ்யூகோ பாஸ் தர நிர்ணயங்களை போலவே குறிக்கோளைக் கொண்டிருந்தால், தொழிலாளர்கள் மற்றும்

சுற்றுச்சூழலின் நலன்களை சிறந்த முறையில் பாதுகாக்கும் விதிமுறைகள் பொருந்தும். ஹ்யூகோ பாஸ் தேவைகளை சரியான இடைவெளியில் சரிபார்த்து மாற்றியமைக்கும் உரிமையை ஹ்யூகோ பாஸ் கொண்டுள்ளது. **ஹ்யூகோ பாஸ் தனிப்பட்ட நிகழ்வுகளில் சரிபார்ப்பு; மேற்கொள்ளப்படும் வழியை தேர்ந்தெடுக்கும்**.

ஹ்யூகோ பாஸ் தர நிர்ணயங்களுக்கு இணங்கவில்லை என்றால், தனிப்பட்ட வழக்கின் அனைத்து சூழ்நிலைகளையும் மற்றும் மீறலின் தீவிரத்தையும் கருத்தில் கொண்டு, பொருளாதாரத் தடைகளுக்கான உரிமையை ஹ்யூகோ பாஸ் கொண்டுள்ளது. அனைத்து தேவைகளும் அடிப்படை ஒப்பந்த கூறுகளாக கருதப்படும்.

மேலும் தொடர்ச்சியான மீறல்கள் ஏற்பட்டால், வணிக உறவை நிறுத்தும் உரிமையை ஹ்யூகோ பாஸ் கொண்டுள்ளது.

1.**சட்டம் மற்றும் வணிக நெறிமுறைகளுக்கு இணங்குதல்**

ஹ்யூகோ பாஸ் அதன் விநியோகிப்பாளர் அனைவரும் அந்தந்த தேசிய சட்டம் மற்றும் சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு இணங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்டுகிறது .எந்தவொரு மோசடி, ஊழல் மற்றும் எந்தவொரு வகையிலும் நியாயமற்ற நன்மைகளை வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது. ஹ்யூகோ பாஸ் அனைத்து விநியோகிப்பாளர்களும் போட்டி, பணமோசடி, பொருளாதாரத் தடைகள் மற்றும் வரிவிதிப்பு தொடர்பான பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும்.

வணிக முடிவுகள் புறநிலை ரீதியாக எடுக்கப்படும் மற்றும் தனிப்பட்ட நலன்களால் மறைக்கப்படக்கூடாது.

மேலும், எல்லா சூழ்நிலைகளிலும் அனைத்து தகவல்கள், தரவு மற்றும் வர்த்தக ரகசியங்களை பாதுகாக்க விநியோகிப்பாளர்கள் கடமைப்பட்டுள்ளனர், மேலும் அவற்றை விநியோகிப்பாளர் உறவின் முடிவில் உடனடியாக திருப்பி அளிக்க வேண்டும் அல்லது நீக்க வேண்டும்.

## 2. மனித உரிமைகள் & தொழிலாளர் தர நிர்ணயங்கள்

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை பாதுகாப்பது ஹ்யூகோ பாஸின் முதல் முன்னுரிமை. ஹ்யூகோ பாஸ் -ன் அனைத்து விநியோகிப்பாளர்களும் தங்கள் சொந்த செல்வாக்கு எல்லைக்குள் உள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கு இணங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எந்தவொரு மீறல்களையும் ஹ்யூகோ பாஸ் பொறுத்துக்கொள்ளாது. அதே சமயம் பணியாளர்களின் வரம்பு மீறல்கள் தொடர்பான புகார் பொறிமுறையை அமைப்பதற்கு விநியோகிப்பாளர் பொறுப்பேற்க வேண்டும் இதுபணியாளர்களின் மீறல்களைப் புகாரளிக்க உதவுகிறது.

மேலும், விநியோகிப்பாளர்களின் பணியாளர்கள் சுயாதீனமான மற்றும் கட்டணமில்லா ஹ்யூகோ பாஸி- ன் விசில்ப்ளோவர் முறையைப் பயன்படுத்த வேண்டும்.

### குழந்தை தொழிலாளர்

ஹ்யூகோ பாஸ் அனைத்து வகையான குழந்தைத் தொழிலாளர்களையும் கண்டிப்பாக நிராகரிக்கிறது. எனவே குழந்தைத் தொழிலாளர்களை விநியோகிப்பாளர்கள் பயன்படுத்துவது கடுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் வரையறை ஐ.எல்.ஓவின் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தரங்களை அடிப்படையாகக் கொண்டது. பணிபுரியும் வாய்ப்பைப் பெறுவதற்கான குறைந்தபட்ச வயது 15 ஆண்டுகள். மேலும் சட்டரீதியான கட்டாயக் கல்வி முடிவடைவதற்கு முன்னர் பணிபுரிய அனுமதிக்க கூடாது. 18 வயதிற்கு முன்னர் பணிபுரியும் வாய்ப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால், இளம் தொழிலாளியைப் பாதுகாப்பதற்கான சில தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இவை சர்வதேச தரங்களை அடிப்படையாகக் கொண்டவை ஹ்யூகோ பாஸ் கொள்கையில் விவரிக்கபப்ட்டுள்ளன.

**கட்டாய உழைப்பு மற்றும் நவீன அடிமைத்தனம்**

ஹ்யூகோ பாஸின் விநியோகிப்பாளர்களுக்காக பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் தாங்கள் தொடரும் வேலைவாய்ப்புக்கான வழிகளை தேர்வு செய்வதற்கும் மற்றும் சுதந்திரமாக சட்டரீதியான பணிவிலகல் முன் அறிவிப்பு காலங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். விநியோகிப்பாளர்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் கட்டாயத் தொழிலாளர்கள், செர்ஃப்கள், அடிமைகள், கைதிகள் அல்லது பிற சார்புடைய பணியாளர்களை பணியமர்த்த வேண்டாம் என்றும் எந்தவொரு நவீன அடிமைத்தனத்தையும் எதிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பணியாளர்கள் தங்கள் பணியிடத்தை விட்டு வெளியேறவும், சட்டரீதியான முன் அறிவிப்பு காலங்களுக்கு பின் தங்களை பணிவழங்குனரை விட்டு விலகி கொள்ள உரிமை வழங்கப்பட வேண்டும். பணியாளர்கள் எல்லா நேரங்களிலும் சுதந்திரமாக செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். பணியாளர்களின் வைப்புத்தொகை மற்றும் பணியாளர்களின் அடையாள ஆவணங்கள் போன்றவற்றை வைத்திருக்க பணிவழங்குனருக்கு அனுமதி இல்லை. மூன்றாம் தரப்பினர் ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டால், சட்டரீதியான தேவைகள் மற்றும் ஹ்யூகோ பாஸால் நிர்ணயிக்கப்பட்ட நிர்ணயங்களின் படி உள்ளதா என்பதை சரிபார்க்க பணிவழங்குனர்கள் பொறுப்பேற்க வேண்டும். மூன்றாம் தரப்பினரை நியமிப்பதன் மூலம் எழும் எந்தவொரு செலவும் எந்தவொரு சூழ்நிலையிலும் பணியாளிடமிருந்து பெறப்பட கூடாது.

**பாகுபாடு**

அனைத்து பணியாளர்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். மேலும் பணியின் தேர்வு செயல்முறை மற்றும் சம வாய்ப்புகளை பணிவாய்ப்பு உறவு முழுவதும்; கொடுக்க வேண்டும். வம்சாவளி, தோற்றம், தேசியம், தோல் நிறம், பாலினம், மதம், சித்தாந்தம், பணியாளர் சங்கங்களின் உறுப்பினர், அரசியல் கருத்து, பாலியல்

நோக்குநிலை, வயது, திருமண நிலை, கர்ப்பம், இயலாமை, நோய் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவொரு பாகுபாடும் தவிர்க்கப்பட வேண்டும்.

**மனிதாபிமான வேலை நிலைமைகள்**

பணியாளர்களின் கவுரவம், தனியுரிமை மற்றும் தனிப்பட்ட உரிமைகள் எப்போதும் மதிக்கப்பட வேண்டும். உடல், உளவியல், பாலியல் அல்லது வாய்மொழி துன்புறுத்தல் தண்டனைகள், தாக்குதல்கள், துஷ்பிரயோகம் மற்றும் அச்சுறுத்தும் நடத்தை ஆகியவை தடைசெய்யப்பட்டுள்ளன. ஹ்யூகோ பாஸ் வகுத்துள்ள விதிமுறைகளின் படி ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் சட்டரீதியான விதிகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன, மேலும் அவை எல்லா நிகழ்வுகளிலும் விகிதாசாரமாக இருக்க வேண்டும்.

**ஊதியம்**

பணியாளர் சரியான முறையில் ஊதியம் பெறுவார் அல்லது அவர்களின் விருப்பப்படி.

குறைந்தபட்ச ஊதியம் மாத அடிப்படையில் பெறுவார்கள்;. மேலும், பணிவாய்ப்பு ஒப்பந்தம் மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகள் குறித்து பணியாளருக்கு ஊதிய சீட்டு வடிவில் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். பணியாளரின் பணி செயல்திறனுக்கு கிடைக்கும் ஊதியம் பணியாளரின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் விநியோகிப்பாளர்கள் கொடுக்க வேண்டும். வணிக பங்குதாரர் சட்டரீதியான பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய குறைந்தபட்ச ஊதியத்தை வழங்க வேண்டும். அல்லது தொழில்துறை வழக்கமாக இருக்கும் ஊதியம் அதிகமாக இருந்தால், அவ்ஊதியத்தை விநியோகிப்பாளர்கள் செலுத்த முடியாவிட்டால் உடனடியாக ஹ்யூகோ பாஸுக்கு தெரிவித்து அதற்கான காரணத்தை நியாயப்படுத்த வேண்டும். ஹ்யூகோ பாஸுடன் சேர்ந்து ஊதிய அளவை சரிசெய்ய விநியோகிப்பாளர்கள் தயாராக இருக்க வேண்டும்.

மேலும், அனைத்து விநியோகிப்பாளர்களும் சுகாதார மற்றும் சமூக நல அமைப்புகளுக்கான தேசிய விதிமுறைகளை கடைபிடித்து பின்பற்ற வேண்டும்.

மேலும் அனைத்து சட்டரீதியான மற்றும் பொருந்தக்கூடிய வேறு தேவைகள் (கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தங்கள் போன்றவை) சிறப்பு சலுகைகளின் அடிப்படையில் கருதப்பட வேண்டும். இது சட்டத்தால் அனுமதிக்கப்பட்டால், மிகை நேர பணிக்கு கூடுதல் ஊதியம் வழங்கப்பட வேண்டும் அல்லது அதற்கு பதிலாக விடுமுறை அளிக்க வேண்டும்.

ஊதியக் குறைப்புகளைப் விநியோகிப்பாளர்கள் ஒழுங்கு நடவடிக்கைகளாக பயன்படுத்துவதை தடை செய்யப்பட்டுள்ளது. ஊழியருக்கு எதிராக பண ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்பே எடுக்கப்பட்டால் மட்டுமே ஒரு ஊழியரின் விருப்பமில்லாமல் பணிநீக்கம் செய்ய அனுமதிக்கும். தேசிய சட்ட விதிகள் இருந்தால், உண்மைகளை மட்டுமே கருத்தில் கொண்டு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும், அதற்கான ஆதாரங்களை விநியோகிப்பாளர்கள் பொறுப்பு ஏற்க வேண்டும்.

**வேலை நேரம்**

வேலை நேரம், ஓய்வு காலம், பொது விடுமுறைகள் மற்றும் விடுமுறை தொடர்பான விதிமுறைகள் உள்ளிட்ட தொடர்பான அந்தந்த தேசிய விதிகள் பின்பற்றப்பட வேண்டும். தேசிய விதிகள் ஏதும் இல்லை என்றால், இவை ஐ.எல்.ஓவின் விதிகளுக்கு உட்பட்டு வார வேலை நேரம் 48 மணி நேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வாரத்தில் மொத்த வேலை நேரம் 60 மணி நேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட மிகை நேரம் சேர்க்கப்பட்டுள்ளது. மிகை நேர பணிபுரிய தானாக முன்வந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.கூடுதல் நேரம் சட்டம் அல்லது பொருந்தக்கூடிய கூட்டு ஒப்பந்தங்கள் (கூட்டு பேரம் பேசும்

ஒப்பந்தங்கள் போன்றவை) மூலம் கட்டுப்படுத்தப்பட்டால், அதற்கேற்ப ஊதியம் வழங்க வேண்டும். ஆறு தொடர்ச்சியான வேலை நாட்களுக்குப் பிறகு, பணியாளருக்கு குறைந்தபட்சம் 24 மணிநேர ஓய்வு காலம் வழங்கப்பட வேண்டும். மேலும், ஒவ்வொரு பணியாளருக்கும் சட்டரீதியான குறைந்தபட்ச விடுப்பு கோர உரிமை உண்டு.

**தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு**

விநியோகிப்பாளர்கள் தனது பணியாளர்களின் பணி நடவடிக்கைகளின் போது அவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் மற்றும் விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்கு எதிராக தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். விநியோகிப்பாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கான அபாயங்களை அடையாளம் காண்பது, மதிப்பிடுவது, தவிர்ப்பதற்கான அமைப்புகள் உள்ளன என்பதை உறுதிசெய்ய வேண்டும் தேசிய விவரக்குறிப்புகள் நீண்ட காலத்திற்கு இணங்க வேண்டும் மற்றும் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பணிச்சூழலுக்கு உத்தரவாதம் அளிக்க இந்த விவரக்குறிப்புகள் போதுமானதாக இல்லை என்று ஹ்யூகோ பாஸ் கருதினால்,  சர்வதேச தொழிலாளர் தரத்திற்கு ஒத்த அதன் சொந்த விவரக்குறிப்புகளை உறுதிப்படுத்தும் உரிமையை ஹ்யூகோ பாஸ் கொண்டுள்ளது. விநியோகிப்பாளர்களின் பணியாளர்களுக்கு வழங்கும் தங்குமிடம் போன்ற தேவைகள் மற்றும் அனைத்து கூடுதல் வசதிகளையும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

**சங்கம் மற்றும் கூட்டு பேரம் பேசும் சுதந்திரம்**

அனைத்து ஊழியர்களுக்கும் பணியாளர் நோக்கங்களுக்காக அவர்கள் விரும்பும் அமைப்புகளை உருவாக்க அல்லது பணியாளர் அமைப்புகளில் சேர உரிமையை வழங்குமாறு விநியோகிப்பாளர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. பணியாளர்கள் குறிப்பாக வேலை நிலைமைகள் மற்றும் ஊதியங்கள் குறித்து சுதந்திரமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும். இந்த உரிமையைப்

பின்தொடரும் பணியாளர்களுக்கு விநியோகிப்பாளர்கள் பாகுபாடு காட்டக்கூடாது, துன்புறுத்தக்கூடாது, மிரட்டக்கூடாது, அறிவிப்பைக் கொடுக்கக்கூடாது.

3. **சுற்றுச்சூழல் அம்சங்கள்**

ஹ்யூகோ பாஸ் அதன் விநியோகிப்பாளர்களை அந்தந்த வணிக நடவடிக்கைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதில் தொடர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறது. உற்பத்தி செய்யப்படும் நாட்டில் குறைந்தபட்சம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் விதிகள் பின்பற்றப்பட வேண்டும். இயற்கை வளங்களை முடிந்தவரை நிலையான மற்றும் திறமையாக பாதுகாக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது, மக்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதுமிக முக்கியமானது. சுற்றுச்சூழல் மேலாண்மை முறை அமைப்பை அதிகரிக்க விநியோகிப்பாளர்கள் பங்களிக்கவேண்டும்.

**ஆற்றல்நுகர்வுமற்றும் கிரீன்ஹவுஸ் வாயுக்களின் உமிழ்வு**

அனைத்து ஆற்றல் தொடர்புடைய மூலங்களையும் கிரீன்ஹவுஸ் வாயுக்களின் உமிழ்வையும் விநியோகிப்பாளர்கள் கண்டறிந்து கண்காணிக்க வேண்டும். ஆற்றல் நுகர்வு மற்றும் உமிழ்வைக் குறைப்பதற்கான ஒரு திட்டத்தைஅமைக்க விநியோகிப்பாளர்கள் முயற்சிக்க வேண்டும். ஹ்யூகோ பாஸ் அதன் விநியோகிப்பாளர்கள் ஆற்றல் திறன் நடவடிக்கைகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை தொடர்ந்து தொடர உறுதியளிக்க வேண்டும்.

**தண்ணீர் பயன்பாடு**

விநியோகிப்பாளர்கள் தங்கள் தண்ணீர் பயன்பாடு கண்காணிக்க மற்றும் பொருத்தமான உத்திகளை நடைமுறையில் கொண்டு அதை மேம்படுத்த வேண்டும். மேற்பரப்பு அல்லது நிலத்தடி நீரிலிருந்து நீர் சுருக்கங்கள் குறைந்தபட்சம் தேசியஅல்லதுஉள்ளூர் தேவைகளுக்கு ஒத்திருக்க வேண்டும். நீரின் தீவிர பயன்பாட்டை உள்ளடக்கிய உற்பத்தி செயல்முறைகளைக் கொண்ட விநியோகிப்பாளர்கள் தொடர்ச்சியான அடிப்படையில் குறிப்பாக தண்ணீரைப் பயன்படுத்துவதைக் குறைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இரசாயன மற்றும் கழிவுநீர் மேலாண்மை**

மக்கள் அல்லது சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் உற்பத்தி செயல்முறைகளுக்கு ரசாயனங்கள் அல்லது பிற பொருட்களின் பயன்பாடு தேவைப்பட்டால், ஒரு அபாயகரமான பொருள் மேலாண்மை அமைப்பு

விநியோகிப்பாளர்களால் ஏற்படுத்தி அவைஎவ்வாறு கையாளப்படுகின்றன, பயன்படுத்தப்படுகின்றன சேமிக்கப்படுகின்றன மற்றும் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும். சுற்றுச்சூழலுக்கும் ஆரோக்கியத்திற்கும் குறைவான தீங்கு விளைவிக்கும் மாற்று பொருட்கள் கிடைத்தால், விநியோகிப்பாளர்கள் இவற்றைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். தேசிய விதிகள் இணங்க வேண்டும். ரசாயனங்கள் மற்றும் பிற பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம், கழிவு நீர் ஓடைகளின் சுத்தங்களை கண்காணிக்கவும், சாத்தியமானதை அடையாளம் காணவும் விநியோகிப்பாளர்கள் கடமைப்பட்டுள்ளனர். இது சட்டரீதியான தேவைகளுக்கு ஏற்ப செய்யப்பட வேண்டும். அவ்வப்போது முறையான இடைவெளியில் சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்

**கழிவு மேலாண்மை**

ஹ்யூகோ பாஸ் அதன் விநியோகிப்பாளர்களை கழிவுகளை தொடர்ந்து குறைக்கவும், அதன் விளைவாக வரும் கழிவுகளை உள்ளூர் சட்டரீதியான தேவைகளுக்கு ஏற்ப அப்புறப்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. விநியோகிப்பாளர்கள் கழிவுகளைத் தவிர்ப்பது அல்லது குறைப்பது மற்றும் மறுசுழற்சி செய்வதற்கான உத்திகளைக் கருத்தில் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பிற சுற்றுச்சூழல் அம்சங்கள்**

காற்று உமிழ்வு, நில பயன்பாட்டு மேலாண்மை, பல்லுயிர் பாதுகாப்பு, சத்தம், துர்நாற்றம் மற்றும் பிற சுற்றுச்சூழல் அம்சங்களுக்கு குறிப்பிட்ட உற்பத்தி செயல்முறைகளைப் பொறுத்து விநியோகிப்பாளரின் இருப்பிடம் மற்றும் மேலே பட்டியலிடப்பட் டுள்ள சுற்றுச்சூழல் அம்சங்களுக்கும் தேசிய அல்லது உள்ளூர் விதிகள் பொருந்தக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**4. அரசு சாரா நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு**

பங்குதார்களுடனான சமூக நிலைமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை மேம்படுத்த, ஒத்துழைப்பு தொடர்பான ஹ்யூகோ பாஸ் பல்வேறு அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. அத்தகைய கூட்டாட்சியின் ஒரு பகுதியாக, ஆரம்பத்தில் உறுதிப்படுத்தப்பட்ட சாத்தியமான சரிபார்ப்புகளுக்கான

(தணிக்கை போன்றவை) உரிமையை இந்தபங்குதாரர் அமைப்புகளுக்கு மாற்றுவதற்கான உரிமையை ஹ்யூகோ பாஸ் கொண்டுள்ளது.

**5. இறுதி விதிகள்**

ஹ்யூ கோபாஸ் தரங்களுக்கு இணங்குவதால் அதன் விநியோகிப்பாளர்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தரங்களுக்கு இணங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. மேலும் மேலாண்மை அமைப்புகள், வழிகாட்டுதல்கள் மற்றும் செயல்முறை விவரக்குறிப்புகள் போன்ற பொருத்தமான உதவிகள் மூலம் அவற்றை செயல்படுத்த மற்றும் ஊக்குவிக்க அதன் பங்குதாரர்களைக் கேட்டுக்கொள்கிறது. விநியோகிப்பாளர்களின் பணியாளர்கள் அனைவருக்கும் இங்கு விவாதிக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து போதுமான மற்றும் வழக்கமான பயிற்சிகள் கொடுக்க வேண்டும். மேலும் விநியோகிப்பாளர்கள் இந்த விவரக்குறிப்புகளை தற்போதைய விநியோகிப்பாளர்களுக்கும் மற்றும் பங்குதாரர்களுக்கும் அனுப்பவும், சரிபார்க்கவும் கடமைப்பட்டுள்ளனர்.

விநியோகிப்பாளர்கள் நடத்தை விதிமுறையை சரியான இடைவெளியில் புதுப்பித்து சரிபார்க்கும் உரிமையைக் கொண்டுள்ளது, அதனால் குறைந்தபட்சம் வருடாந்திர அடிப்படையில், பொருந்தக்கூடிய இடத்தில் புதுப்பித்து மற்றும் மாற்றங்களை சரிபார்த்து அதன் விநியோகிப்பாளர்களுக்கு தெரிவிக்கும் உரிமையை கொண்டுள்ளது.

<u>இது ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அசல் ஒப்பந்தத்தின் (தமிழ்) மொழி பெயர்ப்பு ஆகும். இரு பதிப்புகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், ஆங்கில பதிப்பு மேலோங்கி இருக்கும்.</u>

ஏப்ரல் 2020